1

# வள்ளுவன் வழிகாட்டிய மேலாண்மைச் சித்தாந்தம்

**முனைவர் இரா.வீரமணி**

**இணைப் பேராசிரியர் தமிழ்த்துறை,**

**டாக்டர் என்.ஜி.பி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**

**காளப்பட்டி சாலை, கோயம்புத்தூர்-641048**

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் தோன்றியதிலிருந்து படிப்படியாகத் தன்னை நிலைநிறுத்தியிருக்கிறான். மற்ற விலங்கினங்களைப் போல கிடைக்கின்ற உணவை உண்டு உறங்கி எந்நெறியுமில்லாமல் இவ்வுலகைச் சுற்றி வந்திருக்கின்றான். மெல்ல மெல்லத் தன் வாழ்வை உயர்த்துவதற்குப் பல்வேறு போராட்டங்களைச் சந்தித்திருக்கின்றான். ஹோமோசேபியன்ஸ், நியாண்டர்தால் மனிதர்கள் எவ்வித இலக்கின்றியே இவ்வுலகில் உலவியிருந்திருக்கின்றனர். அவ்வகை மனிதன் தன்னை மெருகேற்றிடவும் உணவைத் தேடுவதற்கும் நிலையாக வாழ்வதற்கும் அவனுக்குள் முதலில் உதித்த சிந்தனை மேலாண்மைச் சிந்தனையே ஆகும். அச்சிந்தனை அவனுக்குள் உதித்தவுடன் அதற்கான உந்துதலுடன் மற்றவர்களையும் உடனிணைத்துக் கொண்டு தனது நிர்வாகத் திறனை வளர்த்துக் கொண்டான். அவ்விதமே தன்னை வடிவமைத்துக் கொண்டவன் தொல் பழங்குடி மனிதன். அவ்வாறு வளர்ந்த மனித நாகரிகம் இலக்கியங்களிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சிறப்பானதாகக் கருதப்படும் திருக்குறளில் மேலாண்மைச் சிந்தனைகளை வள்ளுவர் எடுத்தாண்டுள்ளார். மனித சமூகத்தின் துவக்க காலத்திலேயே மேலாண்மை என்பது பல விதமாகப் பல நிலைகளில் முகிழ்த்திருக்கிறது. அச்சிந்தனையால் மட்டுமே விலங்கினங்களைத் துல்லியமாகச் சரியான திட்டமிடலுடன் குழுவாகச் சேர்ந்து வேட்டையாடி கொன்று உண்ண முடிந்திருக்கிறது. மேலாண்மையின் ஒரு கூறாகச் சரியான திட்டமிடுதலைக் கூற முடியும். ஆதியிலிருந்த மனிதன் ஒரு குழுவை ஒழுங்கமைத்து அதனைச் சரியாக இயக்குவித்தும், ஒருங்கிணைத்தும், கட்டுப்படுத்தியும் விலங்கினங்களை வேட்டையாடியும் வந்திருக்கின்றான். மேலாண்மைச் சிந்தனைக்கான விதை தொல்குடி மனிதனின் வேட்டையாடுதலில் இருந்து தொடங்கியது என்று அறிய முடிகிறது. அத்தகு மிகச் சீரிய மேலாண்மைச் சித்தாந்தங்களை வள்ளுவர் தனது குறட்பாக்களில் எடுத்துரைத்துள்ளார். அச்சிந்தனைகளைப் பற்றி இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**திறவுச் சொற்கள் :** வேட்டையாடுதல், மேலாண்மை, திருக்குறள், வள்ளுவர், நிர்வாகம்

## Abstract

Since the very beginning of human evolution, humankind has slowly come to the understanding of how to build and maintain itself in the world. In the beginning, as other animals, people survived on the food that was easy to find, sleep and walk about without any predetermined aim or a systematized life style. However, over time, the necessity to change the conditions of living made people encounter a great number of difficulties which they had to overcome. There were no specific objectives of early human species like Homo Sapience and Neanderthals, but the desire to perfect life, to guarantee food and achieve stability led to a crucial type of thinking that is known as management or administrative thought.

The rise of this managerial consciousness then led to human beings becoming collective whereby others were engaged in common activities and a certain degree of organizational, coordination, leadership and control skills developed. This is what formed the primitive tribal human and formed the basis of social life in an orderly manner. With the development of the human civilization, these developments took place in the literary tradition as well. Of all the Pathinenkeezhkanakku, the Tirukkural which is considered one of the greatest works of ethics and philosophy depicts the deepest thoughts of management in the form of verses of Valluvar.

Since the origin of the human society, management appeared in different forms and at various levels. By means of planning and teamwork, primitive people could manage to group themselves and hunt efficiently. The basic elements of management, such as planning, organization, coordination, and control, are present in the hunting activities of the primitive communities. In this way, the history of managerial thought dates back to survival tactics of primitive humans. These are advanced and orderly rules of management which were expressed later in couplets by Valluvar. The paper is aimed at discussing and studying such management-oriented concepts as manifested in the Tirukkural.


**Keywords**: Hunting, Management, Tirukkural, Valluvar, Administration

**முன்னுரை**

வள்ளுவர் அறம், பொருள், இன்பம் எனத் திருக்குறளை முப்பாலாகப் பகுத்துத் தன் சிந்தனைகளை எக்காலத்திற்கும் பொருந்துமாறு வள்ளுவத்தில் எடுத்தியம்பியிருப்பது அவரின் சிறப்பு. சில இலக்கியங்கள் தாங்கள் படைத்திடும் காலகட்டத்திற்கு மட்டுமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் பொருந்தக் கூடியதாகவும் இருக்கும். ஆனால் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஏறத்தாழ இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் இயற்றப்பட்டது. அத்தகைய நூல்களின் பகுப்பில் முதன்மையான நூலாக இன்றளவிலும் கொண்டாடப்படும் நூலாகத் திருக்குறளைக் கூற முடியும். கள்ளுண்ணாமை என்கின்ற அதிகாரத்தில் மதுவின் தீங்கு குறித்தும் அதை அருந்துவதால் ஏற்படுகின்ற துன்பத்தைப் பற்றியும் மிக நுட்பமாக வள்ளுவர் ஆய்ந்திருப்பார். எதை ஒருவன் வாழ்வில் செய்ய வேண்டும் எதை ஒருவன் வாழ்வில் செய்யக் கூடாது என்பது பற்றியே திருக்குறள் முழுமையிலும் வலியுறுத்தியிருப்பார். திருக்குறளை முழுமையாக ஆராய்ந்தால் ஒவ்வொரு குறளிலும் வள்ளுவனின் மேலாண்மைச் சிந்தனைத் துளிகள் விரவிக் கிடக்கும். வள்ளுவரின் பார்வையில் வெளிப்பட்டிருக்கும் மேலாண்மை பற்றிய மேலான தத்துவங்களை இக்கட்டுரை ஆராய முயலுகிறது.

**திருக்குறளின் தனித்துவம்**

பேரிலக்கியங்கள் அனைத்துமே உலக அறிஞர்களால் ஈர்க்கப்படுவதில்லை. சிலவகை இலக்கியங்களே உலகப் பிரசித்தி பெற்றதாயிருக்கும். உலகிலுள்ள அனைவரும் சமமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆற்றல்சார் படைப்பாகத் திருக்குறளைக் கருதுவதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இதனைப் பேராசிரியர் மருதநாயகம் தமது ஆய்வில் **“திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போப் அடிகளார் (Rev.G.U.Pope) தமிழில் வடமொழியின் தாக்கம் அதிகம் என்று தமிழர்கள் எண்ணியிருந்த காலத்திலேயே தமிழன் தனித்தியங்கும் ஆற்றலைப் பாராட்டி, “ Tamil is an independent language with a copious and original vocabulary” என்று எடுத்துரைத்தார். திருக்குறளுக்கும் நாலடியாருக்கும் அவர் எழுதிய ஆங்கில முன்னுரைகளில் தமிழின் சொல்வளம் சிறப்பாகப் பேசப்படுகிறது. அளவிறந்த சொற்களைக் கொண்டிருக்கும் தமிழ் வினைத்தொகை, வேற்றுமைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை, ஆகிய ஆறு தொகைகள் வழியும் பெயரெச்சம், வினையெச்சம், சொல்லெச்சம் போன்ற இலக்கண உத்திகள் வழியும் சொற்சிக்கனத்தைக் கையாளக் கவிஞர்களுக்குப் பெருந்துணையாயிருந்ததைத் தமது மொழிபெயர்ப்புப் பணியால் உணர்ந்து கொண்ட போப், ” Ellipsis though difficult to master, is one of the great beauties of Tamil” என்பார்”** [1]

இவ்வாறு தமிழ்மொழியின் வன்மையை திருக்குறள் வழி ஜி.யு.போப் கூறியதை

தமது ஆய்வுக் கட்டுரையில் நிறுவிருக்கிறார்.

**நீதி இலக்கியம் பற்றிய அறிஞர் கருத்து**

நீதி இலக்கியங்கள் என்பவை மனிதனை நல்வழிப் படுத்துவதற்கும் அனைவரது வாழ்வைச் சீராக்குவதற்கும் அறிஞர்களால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் என்று கூற இயலும். அத்தகைய நீதி இலக்கியங்கள் எத்தகைய கருத்துக்களை உள்ளடக்கியிருக்கிறது என்பதைத் தா.ஏ.ஞானமூர்த்தி மேலை அறிஞர்களின் கருத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்.

**"மிகவும் உயர்தரமான இலக்கியம் எப்போதும் நீதி அல்லது ஒழுக்கப் பண்பு வாய்ந்ததாய் இருக்கும் என்பது வின்செஸ்டர் கருத்தாகும். வெறும் நீதிகளைக் கூறுவது நீதி நூலாகும். நீதிப் பண்பாவது நீதிகளைக் கூறுவதாகாது; இலக்கியத்தில் நீதியின் இயல்பு குறிப்பாக விளங்கும்படி சுவைபட அமைப்பதாகும். தனக்குரிய மற்ற கூறுகள் எல்லாம் அமைந்து அறவுணர்ச்சியை நயம்பட உணர்த்தும் இலக்கியம் நனி சிறந்தது என்று கொள்ளலாம்"**[2]

நீதி இலக்கியங்கள் இவ்வாறு மட்டுமே படைக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது மேலை அறிஞர்கள் மற்றும் தா.ஏ.ஞானமூர்த்தியின் கருத்தாகும். அதற்கு வலுச்சேர்ப்பது போல திருவள்ளுவர் தம் குறட்பாக்களைச் சுவைபட இருவரியில் நயம்பட உரைத்திருப்பது அவரின் தனித்ததொரு ஆற்றல் என உணர இயலும்.

**திருக்குறளில் பெண்ணிய மேலாண்மை**

திருவள்ளுவர் வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தில் பெண் என்பவள் தெய்வத்தை வணங்கக் கூடாது. அவ்வாறு வணங்காமல் தன்னுடைய கணவனை வணங்கினால் மழை இவள் பெய்யச் சொன்னால் உடனே மழை பொழியும் என்று தமது குறளில் கூறியிருப்பார். கணவன் மனைவி இருவரும் இணைந்து வாழும் இல்லறத்தில் கணவனைக் கண்கண்ட தெய்வமாகத் தொழுது வழிபட்டால் மட்டுமே இச்சமூகத்தில் குடும்பம் என்கின்ற அமைப்பு சீராக இருக்கும் என்பது வள்ளுவரின் கருத்தாகும். இதிலிருந்து பெண்ணிய மேலாண்மை அல்லது குடும்ப மேலாண்மையில் வள்ளுவர் சிறந்திருக்கிறார் என்பதை உணர முடிகிறது.

இதனை,

**"தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை"** [3]

வள்ளுவர் இவ்வாறு தமது குறட்பாவில் கூறியிருக்கிறார். இக்குறளை ஆய்வாளர்கள் மாற்றுச் சிந்தனையிலும் ஆராய்ந்திருக்கிறார்கள். ஆனால் மேற்கூறப்பட்ட குறள் பெண்ணிய மேலாண்மை சார்ந்த குறளாகவே இருக்கிறது. வேறு சில நூல்களிலும் கட்டுரைகளிலும் பெண்ணடிமை சார்ந்த பதிவாக இக்குறள் இருக்கிறது என்கிறார்கள். ஆனால் நிச்சயமாக அப்பொருளில் வள்ளுவர் இக்குறளைப் பாடவில்லை என்பது தீர்க்கமான கருத்தாம்.

**தி.சு.சத்தியத்தின் கருத்தாக்கம்**

பெண்ணிற்குச் சமூகத்தில் சுயமாக வாழ்வதற்கும் தனித்து முடிவெடுப்பதற்கும் அவளுக்கு உரிமை கிடையாது என்று கூறியிருக்கிறார்.

“ **பெண்ணுக்கென்று சுயசிந்தனை, சுய விருப்பம் இருத்தல் கூடாது. திருமணத்திற்குப் பின் கடவுளைத் தொழும் உரிமை கூட, கற்பெனும் பண்பால் பறிக்கப்படுகிறது. மீறித் தொழுதால் மழை பெய்யாதா? பெய்யுமோ பெய்யாதோ-அவள் குடும்ப வாழ்க்கைக்கு உகந்தவள் அல்ல. காரைக்காலம்மையார் தொன்மம் சான்றாகிறது. பெண்ணையே தெய்வமாகப் போற்றுதலுக்கும், பெண் தெய்வத்தைப் போற்றக் கூடாது என்பதற்கும் உள்ள இடைவெளி பெண்ணின் சரிவைக் காட்டும்”**[4]

இருவேறுபட்ட சிந்தனைகள் திருவள்ளுவரின் திருக்குறளுக்குக் கூறப்பட்டுள்ளது. வள்ளுவர் நிச்சயமாகப் பெண் எதிர்ப்பாளர் கிடையாது. குடும்ப மேலாண்மையில் பெண் சிறந்தவளாக இருந்தால் மட்டுமே மானுட சமூகம் சீரானதாக இருக்கும் என்ற சிந்தனையில் மட்டுமே திருவள்ளுவர் இக்குறளை எழுதியிருக்கிறார் என்பது மறுக்க இயலாத உண்மையாகும்.

**வள்ளுவர் கூறும் எண் மேலாண்மை**

மனிதன் படிப்படியாக நாகரிகம் அடைந்து அறிவையும் ஆற்றலையும் வளர்த்து இருக்கிறான். அவ்வாறு சிறிது சிறிதாகவே முன்னேற்றமடைந்த மனிதன் தனது ஆற்றலை வைத்துத் தன் திறனை வளர்த்திருக்கிறான். இவ்வாறு மனிதன் கற்ற கல்வி, அவனது ஆற்றல் இரண்டையும் எண்ணாக உருவகப்படுத்தித் தனது குறளில் பதிவு செய்திருக்கிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் விதாமகத் தெ.பொ.மீனாட்சி சுந்தரம் **“இங்கே எண்ணெண்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு” என்ற குறள் நினைவிற்கு வருகின்றது. நம்முடைய கல்வி உள்ளிருக்கும் சில ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையாக அமைகிறது. ஏழு பிறவியிலும் தொடர்ந்து வளர்ந்து வரும் ஆற்றல்கள் ஒவ்வொருவரின் சிறப்பியல்புகளாக வெளியாகின்றன. நம்முடைய விஞ்ஞானப் போக்குள்ள அறிவு இவ்வாறு கல்வியால் வளர்கின்றது. இவையெல்லாம் அளந்தறிந்து அறிய முயலும் முயற்சியே ஆம். இந்த அளவைக்கெல்லாம் அடிப்படை எண்கள்தாம். எனவே இத்தகைய அறிவின் பெருக்கத்தைத் தான் ‘எண்’ என்கிறார் வள்ளுவர் என்று கொள்ளுதல் கூடும்”** [5]

தமது நூலில் இவ்வாறு விவரித்திருக்கிறார்.

**வள்ளுவரின் ஆற்றல் மேலாண்மை**

மனிதனுக்குள் பல்லாயிரக்கணக்கான ஆற்றல்கள் புதைந்து கிடக்கின்றன. ஒவ்வொரு ஆற்றலையும் வெளிக்கொணர்ந்து விடாமுயற்சியும், இடைவிடாத உழைப்பும் ஒரு மனிதனை உயரமான இடத்திற்கு அழைத்துச் செல்லும் என்பது வள்ளுவரின் திண்ணமான கருத்தாம். எந்தவொரு செயலைச் செய்யும் பொழுதும் அதற்கு இடையூறாகப் பல துன்பங்கள் வரும். அவற்றையெல்லாம் துடைத்தெறிந்து விட்டு இலக்கை நோக்கிப் பயணித்தால் வெற்றி என்பது உறுதியென்கிறார்.

**இதனை,**

**" துன்பம் உறவரினும் செய்க துணிவு ஆற்றி**

**இன்பம் பயக்கும் வினை"[6]**

வள்ளுவர் இவ்வாறு கூறியிருக்கிறார். தொழிலைத் தொடங்கிய உடன் அதிக இடர்பாடுகள் ஏற்படும். உடனடி இலாபம், வெற்றி போன்றவை கிட்டாது. தொடர் தோல்விகள், நிறைய நெருக்கடிகள் வரும். இவை அனைத்தையும் ஏற்றுக் கொண்டு மனப் பக்குவத்துடன் ஒவ்வொன்றையும் கையாளக் கற்றுக் கொள்ளும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்கிறார். எந்தவொரு சூழ்நிலையிலும் தொடங்கிய தொழிலை விட்டு நீங்கி வேறு பணியைப் பார்த்துக் கொண்டு செல்லக் கூடாது என்கிறார். உறுதியும், மனம் தளராத ஆற்றலும் ஒருவனை உயர்ந்த இடத்திற்கு இட்டுச் செல்லுமென்பது வள்ளுவனின் வாக்காம். இதனை, **"என்னதான் திறமையாகத் திட்டமிட்டு, கட்டுக் கோப்புடன் குறிக்கோள்களை வகுத்து, உத்திகளை வடிவமைத்தாலும் அவற்றைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் வெற்றி அடங்கியிருக்கிறது. Proof of the pudding is in the eating என்பார்களே அதேதான்" [7]**

இவ்வாறு தொழிலைச் செவ்வனே செயல்முறைப்படுத்துவது பற்றி சதீஷ் கிருஷ்ணமூர்த்தி தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

**கற்றல் மேலாண்மை**

கல்வி கற்றலின் மகத்துவத்தை வள்ளுவனைப் போல் யாராலும் தெளிவுறுத்தியிருக்க இயலாது. கசடறக் கற்க வேண்டும் என்கிறார். கல்வியைத் தேடும் பொழுது அவர் இவ்விடத்தில் நுனிப்புல் மேயக் கூடாது என்கிறார். எதை ஒன்றைக் கற்றாலும் ஆழ்ந்து திறம்படக் கற்க வேண்டும் என்கிறார். ஆழ்ந்து கற்கும் பொழுது மட்டுமே மனிதனின் அறிவு விரிவடையும். எல்லையற்று அவளால் சிந்தித்திட முடியும். எல்லையற்று ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது மட்டுமே உலக ஞானம் புலப்படும். இக்கருத்துக்களைப் பகுத்தறிந்து அதன் வழி கசடறக் கற்க வேண்டும் என்றார். இக்கூற்றுக்கு வலுச்சேர்க்கும் விதமாக **"அறிவுத் தேடலின்றி யாரும் மகிழ்ச்சியான வாழ்வை வாழ முடியாதென்பதை நீ அறிவாய். சுமையற்ற வாழ்வைக் கூட அறிவில் நாட்டம் அற்றவர் வாழ முடியாது. அறிவு முதிர்ச்சியே வாழ்வை இன்ப மயமாக்குகிறது. அறிவுத் தேடலின் தொடக்கமே வாழ்வைச் சுமையற்றதாக்கிவிடும்."[8]**

பேரா.ப. மருதநாயகம் தமது நூலில் இக்கருத்தினை எடுத்தியம்பியிருக்கிறார்.

**ஆளறி பணியமர்த்தும் மேலாண்மை**

தகுதியான நபர்களைத் தேர்வு செய்து அவர்களால் இப்பணியினைச் செம்மையாகச் செய்து முடிக்க இயலும் என்பதனை உணர்ந்து தகுந்த நபரைச் சரியான பணியில் அமரச் செய்வது தகுந்த மேலாண்மைச் சிந்தனையாகும். அவ்வாறு நிர்வகித்தால் மட்டுமே வெற்றி என்கின்ற இலக்கினை எளிதாக எட்ட இயலும். இவ்வுண்மையை

உணர்ந்த வள்ளுவப் பெருந்தகை தமது குறளில்,

**" இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**

**அதனை அவன்கண் விடல்"** [9]

இவ்வாறு எடுத்துரைக்கிறார். ஒரு பணியைச் சிரத்தையோடு முடித்துத் தரும் ஆற்றல் எவருக்கு உண்டு என்பதைத் தேடி அறிந்து அவரைப் பணியில் அமர்த்தினால் மட்டுமே மேலாண்மையில் வெற்றி பெற முடியும் என்பதனை வள்ளுவர் அத்தருணத்திலேயே தீர்க்கமாக உணர்ந்திருக்கிறார். தொழில்துறை பெருமளவில் வளர்ச்சியடைந்திடாத காலகட்டத்திலேயே பணியமர்த்தப்படும் நபர் மேலாண்மை குறித்துச் சிந்தித்திருப்பது வள்ளுவரின் தொலை நோக்குப் பார்வையைக் காட்டுகிறது.

**முடிவுரை**

ஆதி காலத்திலிருந்தே மனிதன் மேலாண்மையியலில் மகத்துவம் அடைந்திருக்கின்றான் என்பதை அறிய முடிகிறது. சிந்திக்கும் ஆற்றல், கற்றல் திறன், நிர்வாகவியல் இவையனைத்தையும் ஒருங்கிணைத்துச் சரியான வழியில் இலக்கை நோக்கிப் பயணித்தால் மேலாண்மையில் வெற்றி உறுதி என்பதனை உணர இயலுகிறது.

வள்ளுவர் அறம், பொருள், இன்பம், ஒழுக்கம், அழகியல், அன்பு, இரக்கம், காதல், பரிவு பற்றி ஊன்றிப் பேசியிருந்தபோதிலும் அவர் சிறந்த மேலாளராகத் தன்னை அப்போதே நிலைநிறுத்தியிருக்கிறார் என்பதைக் காண இயலுகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. தாயகம் கடந்த தமிழ்- ப.மருதநாயகம்-பக்-110-111
2. இலக்கியத் திறனாய்வியல்-தா.ஏ.ஞானமூர்த்தி பக்-116
3. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும்-எஸ்.கௌமாரீஸ்வரி-பக்-727
4. பெண்ணியமும் பாரதியும்-பெண் பற்றிய தொன்மக் கருத்துக்கள்-தி.சு.சத்தியம்-பக்-27
5. தமிழும் பிற பண்பாடும்-டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்-பக் 4-5
6. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும்-எஸ்.கௌமாரீஸ்வரி-பக்-805
7. விளம்பர மாயாஜாலம்-சதீஷ் கிருஷ்ணமூர்த்தி பக்-47
8. மேலை மெய்யியலுக்கு வழிகாட்டிய வள்ளுவம்-பேரா.ப.மருதநாயகம் பக்-113
9. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும்-எஸ்.கௌமாரீஸ்வரி பக்-786

**துணை நூற் பட்டியல்**

1. தாயகம் கடந்த தமிழ், டாக்டர் நல்ல பழனிசாமி தொகுப்பு மாலன்,தமிழ் பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் ,முதற்பதிப்பு: ஜனவரி 2014

2. இலக்கியத் திறனாய்வியல், தா.ஏ.ஞானமூர்த்தி ஐந்திணைப் பதிப்பகம், 279, பாரதி

சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-600 005, முதற் பதிப்பு: 2006

3. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும் ,எஸ்.கௌமாரீஸ்வரி, சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை சென்னை-14, முதற்பதிப்பு மார்ச்சு 2009

4. பெண்ணியமும் பாரதியும்,பதிப்பாசிரியர் வீ.அரசு, அலைகள் வெளியீட்டகம், சென்னை-600024,முதல் பதிப்பு டிசம்பர் 2001

5. தமிழும் பிற பண்பாடும், டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை 600098

6. விளம்பர மாயாஜாலம், சதீஷ் கிருஷ்ணமூர்த்தி , கிழக்கு பதிப்பகம் ராயப்பேட்டை, சென்னை-600014

7. மேலை மெய்யியலுக்கு வழிகாட்டிய வள்ளுவம், பேரா.ப.மருதநாயகம், தமிழ் பண்பாட்டு மையம், கோயம்புத்தூர், முதற்பதிப்பு: ஜனவரி 2014